ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2319/20 - 2023 පෙබරවාරි මස 13 වැනි සඳුදා - 2023.02.13

*2319/20 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 1 /2012 (V)*

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் நீர்வாழ் உயிரின ளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின்கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டக்ளஸ் தேவானந்தா,**
கடற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
2023, பெப்புருவரி 01.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளின் புறப்படுகை மற்றும் வந்தடைதல் பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது ஆழ்கடலில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடும், 1980 ஒற்றோபர் 03 ஆந் திகதிய 109 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் மீன்பிடிப் படகுகளைப் பதிவுசெய்தல் பற்றிய ஒழுங்குவிதிகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகொன்றின் புறப்படுகை மற்றும் வந்தடைதலுக்காக பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் அனுமதிப்பதிரத்தின் அதிகாரத்தின்கீழன்றி, ஆளொருவர் அல்லது ஒழுங்கமைப்பொன்று, ஒன்றில் இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது ஆழ்கடலில் மீன்பிடிக்காக ஏதேனும் இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகைத் தொழிற்படுத்துதலாகாது.

1A - PG 6215 — 2606 (2023/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. (1) இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது ஆழ்கடலில் மீன்பிடி தொடர்பில், இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகொன்றின் புறப்படுகை மற்றும் வந்தடைதலுக்காக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள நாடுகின்ற அத்தகைய படகின் சொந்தக்காரர் ஒவ்வொருவரும், பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் தரப்பட்ட படிவத்தில், பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலருக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கமையவும் மற்றும் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் விண்ணப்பகாரரினால் பூரணப்படுத்தப்பட்டுள்ளமை பற்றி திருப்தியடைவதன் மேலும், பொருளளவில் இதற்கான அட்டவணை II இல் தரப்பட்ட புறப்படுகை அனுமதிப்பத்திரமொன்றையும் அத்துடன் பொருளளவில் இதற்கான அட்டவணை III இல் தரப்பட்ட படிவத்தில் வந்தடைதல் அனுமதிப்பத்திரமொன்றையும் விண்ணப்பகாரருக்கு வழங்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் உப ஒழுங்குகுவிதியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் இயைபான இயந்திரமயமாக்கப்பட்டமீன்பிடிப் மீன்பிடிப் படகின் ஒவ்வொரு புறப்படுகைக்காகவும் வந்தடைதலுக்காக பெறப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் உப ஒழுங்குகுவிதியின்கீழ் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் மற்றும் இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் உப ஒழுங்குகுவிதியின்கீழ் அனுமதிப்பத்திரங்களின் வழங்குகை என்பன கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தின் அலுவலகமுறையிலானஇணையத்தளத்துக்கூடாக இலத்திரனியல் முறைகள் மூலம் செய்யப்பட முடியும்.

(5) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருக்கவில்லை என பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படின், பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்தலாம், இல்லாதாக்கலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

(6) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் கைமாற்றத்தக்கவையாக இருத்தலாகாது என்பதுடன், அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும் பின்வருவனற்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்து அவற்றுக்கான எழுத்திலான அவரது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும் :-

(அ) அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரின் மாற்றம் ;

(ஆ) இயைபான படகோட்டியின் அல்லது பணிக்குழு உறுப்பினரின் மாற்றம் ;

(இ) அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவலின் மாற்றம் ; அல்லது

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படுள்ள படகு தொடர்பிலான ஏதேனும் வசதியின், உபகரணத்தின் அல்லது நடவடிக்கைமுறையின் மாற்றம்.

(7) அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும், பணிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அடையாளப்படுத்துகைச் சாதனங்களின் பயன்பாடு என்பன தொடர்பில் இதற்கான அட்டவணை IV இல் தரப்படுள்ள நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகதல் வேண்டும்.

(8) ஒழுங்குவிதி 4 இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் அல்லது அனுமதிப்பத்திரத்தின்கீழ் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரினால் வழங்கப்பட்ட சேவையின் காப்பு, ஒழுங்குமுறை அல்லது வினைத்திறனின் நலன்கருதி அல்லது தேசியப் பாதுகாப்பின் நலன்கருதி உசிதமானதென பணிப்பாளர் தலைமையதிபதி கருதினால் அவை காலத்துக்குக்காலம் மாற்றப்படலாம்.

5. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக

"பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில்நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் பணிப்பாளர் எனப் பொருள்படும் ;

"இலத்திரனியல்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தினால் அதற்கெனக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"ஆழ்கடல்" என்பது, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தினால் அதற்கெனக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"கடற்றொழில்" மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தின் "அலுவலகமுறையான இணையத்தளம்" என்பது, "www.fisheriesdept.gov.lk" எனப் பொருள்படும் ; அத்துடன்

"இலங்கை" நீர்ப்பரப்புக்கள்" என்பது, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தினால் அதற்கெனக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை I

ஒழுங்குவிதி 4 (1)

இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்காகப் புறப்படுதல் மற்றும் வந்தடைதல் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்

| பதிவு | பணிக்குழு உறுப்பினர்கள் | மீன்பிடி உபகரணம் | சரிபார்ப்புப் பட்டியல் |
|---|---|---|---|

விண்ணப்ப இல. :

விண்ணப்பகாரரின் முழுப்பெயர். :

முகவரி. :

தேசிய அடையாள அட்டை இல. :

தொலைபேசி இல.:

மின்னஞ்சல் முகவரி :

தொலைநகல். :

மீன்பிடித் தொழிற்பாட்டுப் பிரதேசம் :

இலங்கை நீர்ப்பரப்புக்கள் : ☐ ஆழ்கடல் : ☐

படகின் பதிவு இல. :

தொழிற்பாட்டு உரிம இல. :

கடற்றொழில் அடையாளம். :

தொழிற்பாட்டு உரிமத்திலுள்ள படகோட்டி. :

புறப்படும் துறைமுகம். :

புறப்படும் திகதி. :

கடந்தகால பயண விபரங்கள். :

SKL இல :

புதிய படகோட்டியைச் சேர்க்க

அடுத்து

புறப்படுகைக் குறிப்புப் பதிவு

பதிவு | பணிக்குழு உறுப்பினர்கள் | மீன்பிடி உபகரணம் | சரிபார்ப்புப் பட்டியல்

மீனவர் அடையாளம் :

தேடுகை

சேர்க்கவும்

| மீனவர் அடையாளம் | பெயர் | தேசிய அடையாள அட்டை இல. | நடவடிக்கை |
|---|---|---|---|
| | | | |

திரும்பவும்

அடுத்து

புறப்படுகைக் குறிப்புப் பதிவு

பதிவு | பணிக்குழு உபகரணம் | மீன்பிடி உபகரணம் | சரிபர்ப்புப் பட்டியல்

உபகரண வகுதி

உபகரணம்

நீளம்/அலகுகளின் எண்ணிக்கை

சேர்க்கவும்

| மீன்பிடி உபகரணம் | உபகரண வகுதி | நீளம் (மீற்றர்கள்) | நடவடிக்கை |
|---|---|---|---|
| | | | |

திரும்பவும்

அடுத்து

புறப்படுகைக் குறிப்புப் பதிவு

| பதிவு | பணிக்குழு உபகரணம் | மீன்பிடி உபகரணம் | சரிபார்ப்புப் பட்டியல் |
|---|---|---|---|

| | |
|---|---|
| படகுப் பதிவுப் புத்தகம் | |
| உள்நாட்டு தொழிற்பாட்டு உரிமம் | |
| ஆழ்கடல் தொழிற்பாட்டு உரிமம் | |
| மீன்பிடி அழைப்புச் சமிஞ்ஞை | |
| VMS | |
| உயிர்காப்பு மேலங்கிகள் | |
| உபகரணக் குறியீடு | |
| படகிலுள்ள தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணம் | |
| தீயணைப்புக் கருவிகள் | |
| மீன் விடுவிக்கும் உபகரணங்கள் | |
| படகுக் காப்புறுதி | |
| படகிலுள்ள பிளாஸ்ரிக் நீர் போத்தல்களின் எண்ணிக்கை | |

V.R.B. இல. [ ]

L.O.L இல. [ ]

H.O.L இல. [ ]

L.B இல. [ ]

அழைப்புச் சமிஞ்ஞை [ ]

விண்ணப்பகாரரின் கையொப்பம்

திகதி

திரும்புக

சமர்ப்பிக்க

அட்டவணை II

[ஒழுங்குவிதி 4(2)]

இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது ஆக்கடலில் மீன்பிடிப்பதற்காக கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட மாதிரி புறப்படுகை அனுமதிப்பத்திரம்

கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களம்
த.பெ.எண. 531 புதிய செயலகம், மாளிகாவத்த, கொழும்பு 10, இலங்கை
தொலைபேசி : 0094-11-2449170,2422980,2434075
தொலைநகல் : 0094-11-2449170,2422980,243475
மின்னஞ்சல் : dgdfar@gmail.com

| விண்ணப்ப இல. |
|---|
| |

**இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கான புறப்படுகை அனுமதிப்பத்திரம்**

| | | |
|---|---|---|
| 1. மீன்பிடித் தொழிற்பாட்டு பிரதேசம் | இலங்கை நீர்ப்பரப்புக்கள் | ஆழ்கடல் |
| 2. படகின் பதிவு இல. | | |
| 3. புறப்படும் துறைமுகம் | புறப்படும் திகதி : | |
| 4. படகுச் சொந்தக்காரரின் பெயர் | | |
| 5. ஆழ்கடல் தொழிற்பாட்டு உரிம இல. | | |
| 6. உள்நாட்டு தொழிற்பாட்டு உரிம இல. | | |
| 7. படகோட்டியின் பெயர் | | |
| SKL இல. | | |
| தேசிய அடையாள அட்டை இல. | | |

| | |
|---|---|
| 8. பணிக்குழு உறுப்பினர்களின் விபரங்கள் | |
| பெயர் | தேசிய அடையாள அட்டை இல. |
| i. | |
| ii. | |
| iii. | |
| iv. | |

9. மீன்பிடி உபகரணம் பற்றிய தகவல்கள்

| உபகரணம் | உபகரண வகுதி | அளவு |
|---|---|---|
| | | |
| | | |

10. மீன்பிடிப் படகு புறப்படுகைக்கான சரிபார்ப்புப் பட்டியல்

| | |
|---|---|
| படகின் பதிவுப் புத்தகம் | |
| உள்நாட்டு தொழிற்பாட்டு உரிமம் | |
| ஆழ்கடல் தொழிற்பாட்டு உரிமம் | |
| மீன்பிடி பயணக்குறிப்பேடு | |
| வானொலி அழைப்பு சமிக்ஞை | |
| VMS | |
| உயிர்காப்பு மேலங்கிகள் | |
| உபகரணக் குறியீடு | |
| படகிலுள்ள தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணம் | |
| தீயணைப்புக் கருவிகள் | |
| மீன் விடுவிக்கும் உபகரணங்கள் | |
| படகுக் காப்புறுதி | |
| படகிலுள்ள பிளாஸ்ரிக் நீர் போத்தல்களின் எண்ணிக்கை | |

*11. குறிப்புரைகள்*

| | | |
|---|---|---|
| துறைமுக அலுவலரின் கையொப்பம் | துறைமுக முகாமையாளரின் கையொப்பம் | கரையோர பாதுகாப்பு அலுவலரின் கையொப்பம் |

*மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்கள பணிப்பாளர் தலைமையதிபதியின் கையொப்பம்* *வழங்கிய திகதி*

அட்டவணை III

[ஒழுங்குவிதி 4(2)]

*இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது ஆக்கடலில் மீன்பிடிப்பதற்காக கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட மாதிரி வந்தடைதல் அனுமதிப்பத்திரம்*

கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களம்
த.பெ.எண. 531 புதிய செயலகம், மாளிகாவத்த, கொழும்பு 10, இலங்கை
தொலைபேசி : 0094-11-2449170,2422980,2434075
தொலைநகல் : 0094-11-2449170,2422980,243475
மின்னஞ்சல் : dgdfar@gmail.com

**இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கானவந்தடைதல் அனுமதிப்பத்திரம்**

1. படகு இல.
2. படகுச் சொந்தக்காரரின் பெயர் :
3. புறப்படுகைக் கோரிக்கை அடையாளம் :
4. புறப்படும் திகதி :
5. புறப்படும் துறைமுகம் :
6. வந்தடையும் திகதி :
7. வந்தடையும் துறைமுகம் :
8. வந்தடைதலை அங்கீகரிப்பவர் :
   (புகுபதிவிலிருந்து விபரங்களைப் பெறுக)
9. குறிப்புரைகள் :

*கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியின் கையொப்பம்* *வழங்கிய திகதி*

அட்டவணை IV

[ஒழுங்குவிதி 4(7)]

**பணிக்குழு உறுப்பினர்களுக்கான நியதி நிபந்தனைகள்**

1. அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும், இதற்கான அட்டவணை II இல் தரப்பட்ட புறப்படுகை அனுமதிப்பத்திரத்தின் விடயம் 8 இல் குறித்துரைக்கப்பட்ட எல்லா பணிக்குழு உறுப்பினர்களும், இயைபான இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகின் ஒவ்வொரு புறப்படுகைக்கும் முன்னர், மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்ட காப்புறுதிக் கம்பெனியொன்றினால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆயுள் காப்புறுதிக் காப்பீடொன்றைக் கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*2*. அத்தகைய பணிக்குழு உறுப்பினர் ஒவ்வொருவரும், இயைபான இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகினது புறப்படுகை நேரத்திலும் வந்தடைதல் நேரத்திலும் அப்படகில் இருத்தல் வேண்டும்.

*3*. எவரேனும் பணிக்குழு உறுப்பினருக்கு மருத்துவ அல்லது வேறு உதவியொன்று தேவைப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருந்தாலொழியவும், அல்லது அதனையொத்த ஏதேனும் அவசர நிலையொன்றின் விடயத்திற் தவிரவும், பணிக்குழு உறுப்பினர்கள் இயைபான இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகின் புறப்படுகையின் பின்னர் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் படகொன்றிலிருந்தோ அல்லது அத்தகைய படகுக்கோ பரிமாற்றப்படுதலோ அல்லது மாற்றப்படுதலோ ஆகாது என்பதுடன் அத்தகைய சூழ்நிலையொன்றில் ஒற்றைப் பக்கப் பட்டை (SSB) வானொலித் தொடர்பாடலுக்கூடாக கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்துக்கு வழங்கும் முன்னறிவித்தல் மூலம் பணிக்குழு உறுப்பினர் வேறொரு மீன்பிடிப் படகுக்கு மாற்றப்பட முடியும்.

**அடையாளப்படுத்துகைச் சாதனங்களின் பயன்பாடு பற்றிய நியதி நிபந்தனைகள்**

*1*. (1) அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும், இதற்கான இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகானது மீன்பிடிக் கருவியைக் குறித்துக்காட்டுவதற்குரிய மிதவைகளுக்கான கடலோர நடமாடும் சேவை அடையாள (MMSI) இலக்கத்துடன் கட்டமைக்கப்பட்ட தன்னியக்க அடையாளப்படுத்துகை முறைமையொன்றுடன் (AIS) அமைந்துள்ளதென்றும், அத்தகைய சாதனங்கள் சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியும் அத்துடன் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தினாலும் *1991* ஆம் ஆண்டின் *25* ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினாலும் கொடுக்கப்பட்ட பணிப்புக்களுக்கு இணங்கியும் கட்டமைக்கப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*1*. (2) மேற் சொன்ன நடவடிக்கைமுறை கடைப்பிடித்தொழுகப்பட்டாலொழிய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர், ஒன்றில் இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது ஆழ்கடல்களில், மீன்பிடிக்காக இயைபான இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகின் புறப்படுகைக்கு அனுமதிக்கப்படுதலாகாது.

EOG 02-0138